# சீர்காழி நகராட்சி



**2023–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27–ஆம் தேதி நாள்.27.04.2023 வியாழன்கிழமை காலை 10.00 மணிக்கு நகர்மன்ற கூடத்தில் நடைபெற்ற அவசர கூட்டம் நடவடிக்கை.**

**திருமதி.R.துர்காபரமேஸ்வரி.MBA.,**
**நகர்மன்ற தலைவர்,**
**சீர்காழி நகராட்சி.**

| | | |
|---|---|---|
| பொருள் எண்-1 | சீர்காழி நகராட்சியில் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தினந்தோறும் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளான வீடு தோறும் மட்கும் மற்றும் மட்காத குப்பைகளை தரம் பிரித்து வாங்கும் பணிக்கு பயன்படுத்தப்படும் **BOV** வாகனங்கள் பழுதடைந்து செயல்படாமல் இருப்பதால் தூய்மை பணிகள் மேற்கொள்வதில் தொய்வு ஏற்படுகிறது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி **BOV** வாகனங்களை பழுது நீக்கம் செய்யவும் பணி செய்வதற்கு ஆகும் உத்தேச செலவீனத் தொகை **ரூ.2.00 லட்சம்** மாவட்ட ஆட்சியரின் தன் விறுப்ப நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 1313/2021/எச்.1** | **தீர்மான எண்-927**<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-2 | சீர்காழி நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பை சேகரிக்கும் பணிகளை Service Provider /agency/ contractor மூலம் மூன்று ஆண்டுகளுக்கு மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை–28 அவர்களின் செயல்முறை ஆணை எண்.**35295/2022**/EA2- SWM-20 நாள். **10.01.2023–ல்** அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை தினகரன் மற்றும் டைம்ஸ் ஆப் இந்தியா தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழில் **01.02.2023** அன்று விளம்பரம் செய்யப்பட்டுள்ளது, அதற்கான பட்டியல் தொகை **ரூ.1,05,106/-**க்கான செலவினத்தினை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 499/2022/எச்1.** | **தீர்மான எண்-928**<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| பொருள் எண்-3 | சீர்காழி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தும் வாகனத்தை இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் 3 ஒட்டுநர்கள் (Supply of Man Power) ஆகியோரது, பணிக்காலம் **31.03.2023** ஆம் தேதியுடன் முடிவடைவதால், பணியின் முக்கியதுவம் கருதி மாவட்ட ஆட்சித்தலைவர் மயிலாடுதுறை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**8945/2022/ஈ1** நாள்: **24.08.2022** ஆம் தேதிய உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ள, விலை விகிதமான நாள் ஒன்றுக்கு **ரூ.560/–** வீதம் **1** மாத கால அவகாசத்திற்கு பணி நீடிப்பு செய்தது கொள்ளவும். உத்தேச செலவின தொகை **ரூ.50,400/–**க்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில், **01.04.2023** முதல் **30.04.2023** வரையிலான காலத்திற்கு "ஸ்ரீ பைரவர் மகளிர் சுய உதவிக்குழுவின்" மூலம் பணிக்கு அமர்த்தி பணிகள் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண். 2670/2020/எச்.1** | தீர்மான எண்-929<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-4 | சீர்காழி நகராட்சியில் பொதுசுகாதாரபிரிவில் தனியார் மகளிர் சுய உதவி குழு மூலம் ஒப்பந்த அடிப்படையில் **80** தூய்மைபணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்களின் ஒப்பந்த பணிகாலம் **31.03.2023** வுடன் முடிவடையும் நிலையில் உள்ளது, எனவே திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை திறம்பட செயல்படுத்தவும் குறிப்பாக தினத்தோறும் குடியிருப்புகளில் சேகரம்மாகும் திடக்கழிவுகளை மட்கும் மற்றும் மட்காத குப்பைகளாக பிரித்து மட்கும் குப்பைகளை உரமாக்க MCC யில் கொண்டு சேர்த்தல், மட்காத பிளாஸ்டிக் கழிவுகளை சிமெண்ட் ஆலைக்கு அனுப்பி வைத்தல் மற்றும் நகரத்தின் பொது சுகாதாரத்தை பாதுகாத்தல், போன்ற பணிகளை தினசரி மேற்கொள்ள வேண்டியுள்ளது.<br>எனவே மேற்கண்ட இப்பணிகளை தனியார் மகளிர்சுய உதவிக் குழு மூலம் பணிபுரியும் **80** தூய்மைபணியாளர்களையும், மாவட்ட ஆட்சித்தலைவர் மயிலாடுதுறை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**8945/2022/ஈ1** நாள்: **24.08.2022** ஆம் தேதிய உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதமான நாள் ஒன்றிற்கு **ரூ.460/–** என்ற விகிதத்தில் **01.04.2023** முதல் **30.04.2023** வரையிலான **1** மாத காலத்திற்க்கு மட்டும் தூய்மைபணி மேற்கொள்ள "**அப்துல்கலாம்**" மற்றும் "**அரும்பு**" மகளிர் சுய உதவி குழுகளுக்கு பணி நீட்டிப்பு செய்திடவும், அதற்கான உத்தேச செலவினத்தொகையாக **ரூ.11,04,000/–**ற்கு நகராட்சிப் பொது நிதியிலிருந்தும் திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டுக் கட்டணக் கணக்கிலிருந்தும் செலவினம் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்-930<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-5 | சீர்காழி நகராட்சி வார்டு எண் 5 ஈசானியதெருவில் இந்நகராட்சிக்கு சொந்தமான எரிவாயு தகனமேடைக்கு **10** எண்ணிக்கைகள் Indane Gas(LPG) சிலிண்டர்கள் மத்திய அரசின் மானிய சிலிண்டர் வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கிட THE NATIONAL MOTHER AGENCY SIRKALI நிறுவனத்திடமிருந்து கீழ்கண்டுள்ளவாறு கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது .<br>1) 10 சிலிண்டர்களுக்கான முன்வைப்புத்தொகை ரூ.24,000.00<br>2) 10 சிலிண்டர்கள் (kit உள்பட) விலை ரூ. 22,506.00<br>மொத்தம் ரூ. 46,506.00<br>மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள தொகை **ரூ.46,506.00/–** யை பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு **15**.ன் கீழ் நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** நகர்மன்றதலைவரின் முன் அனுமதி பெற்று செலவீனம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 3000 / 2021 / இ1** | தீர்மான எண்-931<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>பொருள் எண்-6</td>
<td>சீர்காழி நகராட்சியில் நகராட்சியில் பொது நிதி 2022–23 இன் கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 5 ஈசானியத் தெருவில் உள்ள நவீன எரிவாயு தகனமேடை உட்புற புரணமைப்பு பணிக்கு 07.02.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த மதிப்பீட்டைவிட ரூ.</th></tr>
<tr><td>1</td><td>திருமதி.டி.ஜீவா ஒப்பந்ததாரர்,<br>திருமஞ்சனவீதி சீர்காழி.</td><td>(-) 0.04% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு க.செல்வம், ஒப்பந்ததாரர்,<br>ஊழியன்காரன்தோப்பு, சீர்காழி.</td><td>(+) 0.08% அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக(-) 0.04% கொடுத்துள்ள திருமதி.டி.ஜீவா ஒப்பந்ததாரர்,திருமஞ்சனவீதி சீர்காழி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். மேலும் பணி அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதிப்பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்: 569/2022/இ1/அ</td>
<td>தீர்மான எண்-932<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-7</td>
<td>சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் மயிலாடுதுறை அவர்கள் 14.02.2023 அன்று நேரடி ஆய்வு மேற்கொண்டதில் இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்துநிலையத்தின் உட்புற சாலைகள் மிகவும் சேதமடைந்து போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு ஆபத்தினை விளைவிக்கும் வகையில் உள்ளதனை தற்சமயம் உட்புறசாலையினை சீரமைப்பு செய்திட மாவட்ட ஆட்சியர் தெரிவித்துக்கொள்ளப்பட்டதற்கிணங்க, மேற்படி சாலையினை சீரமைப்பு செய்திட ரூ.5.00 இலட்சத்திற்கான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும், இச்செலவீனத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொண்டதனையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு :<br>
நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளிகள் கோரியதை மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்: 327 /2023/இ1</td>
<td>தீர்மான எண்-933<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-8</td>
<td>சீர்காழி நகராட்சியில் நகராட்சியில் பொது நிதி 2022–23 இன் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 5 ஈசானியத் தெருவில் உள்ள–நவீன எரிவாயு தகன மேடை இயந்திரங்கள் மற்றும் புகைபோக்கி உபகரணங்கள் பழுதுநீக்கும் பணிக்கு 10.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த மதிப்பீட்டைவிட ரூ.</th></tr>
<tr><td>1</td><td>திருமதி.டி.ஜீவா ஒப்பந்ததாரர்,<br>திருமஞ்சனவீதி சீர்காழி.</td><td>(-) 0.04% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு க.செல்வம், ஒப்பந்ததாரர்,<br>ஊழியன்காரன்தோப்பு, சீர்காழி.</td><td>(+) 0.08% அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக(-) 0.04% கொடுத்துள்ள திருமதி.டி.ஜீவா ஒப்பந்ததாரர்,திருமஞ்சனவீதி சீர்காழி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். மேலும் பணி அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதிப்பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கிகரிக்கலாம். ந.க.எண்: 569/2022/இ1</td>
<td>தீர்மான எண்-934<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>பொருள் எண்-9</td>
<td>சீர்காழி நகராட்சியில் நகராட்சியில் பொது நிதி 2022–23 இன் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தின் உட்புற சாலையினை சீரமைக்க மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வின்படி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ் கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த மதிப்பீட்டைவிட ரூ.</th></tr>
<tr><td>1</td><td>திருமதி.டி.ஜீவா ஒப்பந்ததாரர்,<br>திருமஞ்சனவீதி சீர்காழி.</td><td>413622.78<br>(-) 0.01% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு க.செல்வம், ஒப்பந்ததாரர்,<br>ஊழியன்காரன்தோப்பு, சீர்காழி.</td><td>413801.76<br>(+) 0.03% அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :<br>
1) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக (-) 0.01% கொடுத்துள்ள திருமதி.டி.ஜீவா ஒப்பந்ததாரர்,திருமஞ்சனவீதி சீர்காழி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். மேலும் பணி அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதிப்பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கிகரிக்கலாம். ந.க.எண்- 327/2023/இ1</td>
<td>தீர்மான எண்-935<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-10</td>
<td>சீர்காழி நகராட்சி நவீன எரிவாயு தகனமேடையினை முதன்முதலில் பயன்பாட்டிற்கு கொண்டுவரும்போது பராமரித்தல் மற்றும் இயக்குதல் பணிக்கு, காமராஜர் மக்கள் நல பேரவை என்ற நிறுவனத்திற்கு இந்நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண் 727 நாள் 17.02.2015 அன்று நகராட்சி ஆணையர் செயல்முறைகள் நாள்: 18.02.2015 அன்று வழங்கப்பட்ட உத்திரவில் 3 வருட காலத்திற்கு மட்டுமே, உரிய நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.அதன் பின்பு காலநீட்டிப்பு ஏதும் செய்யப்படாமல் மேற்படி நிறுவனத்தின் மூலம் எரிவாயு தகனமேடை 13.02.2023 வரை இயக்கப்பட்டு வந்தது. பின்னர் எரிவாயு தகனமேடையில் இந்நகராட்சியால் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் உரிய அனுமதி பெறப்பட்டு, 13.02.2023 அன்று நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யும்மாறு காமராஜர் மக்கள் நல பேரவை அறிவிப்பு அனுப்பபட்டு பொதுமக்களுக்கு மறு அறிவிப்பு வரும் வரை எரிவாயு தகனமேடை இயங்காது என அறிவிக்கப்பட்டது.<br>
தற்சமயம் எரிவாயு தனமேடையில் பழுது நீக்கம் மற்றும் முக்கிய பராமரிப்பு பணிகள் முடிவடைந்து 10.04.2023 அன்று சோதனை ஓட்டம் (Trail Run) நடைப்பெற்று நகராட்சியின் மூலம் நகராட்சி பணியாளர்களைக் கொண்டு மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்ற தகவல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>
மேலும் எரியூட்டும் ஒரு சடலத்திற்கு எரியூட்டும் கட்டணம் ரூ 2500/–என நிர்ணையிக்கலாம். இக்கட்டணம் இலாபநோக்கமின்றி செலவுகளை சரிகட்டும் விதமாக நிர்ணையிக்கப்படுகிறது என்பதனை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்: 3000 / 2021 / இ1</td>
<td>தீர்மான எண்-936<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-11</td>
<td>சீர்காழி நகராட்சி நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்:07 அவர்களின் வேண்டுகோளின்படி அவ்வார்டுக்குட்பட்ட குமரக்கோவில் மேலத்தெருவில் உள்ள நீண்ட காலம் பயன்பாட்டில் இல்லாமல் மிகவும் பழுதடைந்த நிலையில் சாலையின் குறுக்கே ஆபத்தான நிலையில் உள்ள மினிபவர் பம்பு கட்டிடம் உள்ளதனை பொதுமக்களின் நலன்கருதி அதனை இடித்து அகற்றிடவும் இப்பணி தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் இதற்காகும் செலவீனத்தினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து (2023–2024) மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்: 818/ 2023 / இ1</td>
<td>தீர்மான எண்-937<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்-12 | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண் 31420/2022/தூ.இ.தி.2 நாள் 17.11.2023 கடிதத்தில் படி தூய்மை இந்தியா திட்டம் (ந) 2.0 கீழ் சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட உபயோகத்தில் உள்ள கழிப்பறைகள் பயன்படுத்துவோரின் கருத்துக்களை தெரிவிக்க QR Code பொருத்த அறிவுறுத்தப்பட்டது. இதன் படி நகராட்சி பகுதியில் உள்ள 18 பொதுகழிவறைகளுக்கு QR Code பொருத்தும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் படி பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிமேற்கொண்டதனையும் செவீனத்தொகை **ரூ.25783/–**யை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொண்டதனையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : நகர்மன்றதலைவரின் முன் அனுமதி பெற்று செலவீனம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிகலாம்.<br>**ந.க.எண்: 2705/ 2022 / இ1** | தீர்மான எண்-**938**<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-13 | சீர்காழி நகராட்சியின் 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும் 2023-2024 ஆம் நிதியாண்டிற்கான திட்ட வரவு செலவு மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.1919/20218/பி2** | தீர்மான எண்-**939**<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-14 | சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான சித்தமல்லி தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள ஆழ்துளையாய் கிணற்றில் உள்ள 45 HP நீர்முழ்கி மோட்டார் பம்பு பழுது அடைந்துள்ளதால் பொதுமக்களுக்கு சரியான நேரங்களில் குடிநீர் வழுங்க இயவில்லை. குடிநீரின் தேவையின் பணியின் அவசரம் அவசியம் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி மேற்படி மோட்டாரினை பழுதுநீக்கம் செய்திட நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கை மற்றும் இதற்காண செலவீனம் **ரூ.35,000/–** நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொண்டதனையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : நகர்மன்றதலைவரின் முன் அனுமதி பெற்று செலவீனம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிகலாம்.<br>**ந.க.எண்: 827/ 2023 / இ1** | தீர்மான எண்-**940**<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-15 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் உள்ள கைப்பம்புகள் குடிநீர் குழாய்களில் அடிக்கடி ஏற்படும் பழுதுகளை சீர்செய்திட கைப்பம்புகளின் உதிரி பாகங்கள் மற்றும் அதன் தொடர்புடைய குடிநீர் பைப்புகளை கொள்முதல் (குடிநீர் பராமரிப்பு ஆண்டு பழுது நீக்கம் பணிகள் 2023–24) செய்வதற்கு **ரூ3.00** இலட்சத்திற்கு விலைப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் இதற்காகும் செலவீனத்தினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 828/ 2023 / இ1** | தீர்மான எண்-**941**<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-16 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட கரிகுளம் காந்திபார்க் உள்ளே இயங்கி வந்த சங்கு பழுதடைந்த நிலையில் இயங்காமல் உள்ளதனை பொதுமக்கள் நலன் கருதியும் ரம்ஜான் நோம்பு நேரங்கள் குறித்தும் சங்கு சீரமைத்து மீண்டும் ஒலித்திட நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களின் வேண்டுக்கோள்கிணங்க பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் **ரூ.36,000/–** செலவீனம் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொண்டதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 847 / 2023 / இ1** | தீர்மான எண்-**942**<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| பொருள் எண்-17 | சீர்காழி நகராட்சி நகர்மன்ற உறுப்பினர்கள் வார்டு எண்.13,15,16 மற்றும் 19 அவர்களின் கோரிக்கைகளின்படி சீர்காழி நகரின் பிரசித்தி பெற்ற ஸ்தலமாக ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேகம் 31 ஆண்டுகளுக்கு பிறகு எதிர்வரும் மே மாதம் 24-ம் தேதி நடைபெற உள்ளது என்பதால், கும்பாபிஷேகத்தில் அனைவரும் கலந்து கொள்ள ஏதுவாக உள்ளூர் பொதுவிடுமுறை அறிவிப்பு தீர்மானம் நிறைவேற்றி மாவட்ட ஆட்சியருக்கும் அரசுக்கும் அனுப்பி அனுமதி பெற வேண்டும் என கோரியுள்ளார்கள். மேற்படி பொருள் குறித்து மன்றத்தின் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது. | தீர்மான எண்-943<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-18 | சீர்காழி நகராட்சி அலுவலகம் மற்றும் அதனை சுற்றியுள்ள குடிநீர் மேல்நீர்தேக்க தொட்டி,நீரேற்றம் இடங்களில் உள்ள குடிநீர் உதிரிபாகங்கள் போன்றவை அடிக்கடி திருட்டுபோவதை தவிர்க்கவும்,அலுவலக பாதுகாப்பினை மேம்படுத்தவும், அலுவலக கட்டிடத்தினை சுற்றி உள்புறம் மற்றும் வெளிபுறம் ஆகிய இடங்களில் ரூ.2.17 இலட்சம் மதிப்பீட்டில் CCTV கேமராக்கள் பொருத்தும் பணிக்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் இச்செலவீனத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 884/2023 / இ1** | தீர்மான எண்-944<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-19 | சீர்காழி நகராட்சி 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.வள்ளி அவர்களின் கோரிக்கையின்படி சீர்காழி நகரின் முக்கிய சாலைகளில் அமைந்துள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தருமாறு கோரியுள்ளார். தற்சமயம் முக்கிய சாலைகளான நெடுஞ்சாலைத்துறை சாலைகளை நகரசார் அளவரால் அளவீடு செய்யப்பட்டு அத்துறையினரால் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்கான முழு ஒத்துழைப்பு நகராட்சி பணியாளர்களால் வழங்கப்படும். மேலும் உள்ளாட்சி சாலைகளாக இருப்பின் நகரசார் அளவரால் அளவீடு செய்து ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு அகற்றப்படும். மேற்படி பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது. | தீர்மான எண்-945<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-20 | மனுதாரர் திரு.ஆர். இளங்கோவன் (பவர் ஏஜெண்ட்) த/பெ. ராஜாங்கம் நெ.30/123 பிடாரி தெற்கு வீதி, சீர்காழி அவர்கள்<br>சீர்காழி நகராட்சி – நகராட்சி எல்லைக்குட்பட்ட 49 கைவிளாஞ்சேரி கிராமம் வார்டு பி , பிளாக் 1 நகர அளவு எண் 38/3, சர்வே எண்.12/3, ஒரு ஏக்கர் 86 செண்ட் பரப்பளவில் உள்ள நிலம் சீர்காழி நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட முழுமை திட்டத்தில் விவசாய பகுதியாக உள்ளது. மேற்படி விவசாய பகுதியாக உள்ளதை குடியிருப்பு பகுதியாக நிலப்பயன்பாடு மாற்றம் செய்து தர கோரி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் நகராட்சி வழியாக விண்ணபேப்பம் செய்துள்ளார்.<br>மேற்படி மனுதாரருக்கு பொது ஆவண எண்:2234/2022 நாள்: 22.06.2022 அதன் மூலம் சொந்தமாக உள்ளது. இக்கிரய பத்திரத்திற்கு உரிய மூல ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி இடம் சீர்காழி நகராட்சி உத்தேசிக்கப்பட்டுள்ள அங்கரிக்கப்பட்ட முழுமை திட்டத்தில் விவசாய பகுதியாக பயன்பாடாக அமைந்துள்ளது. மனுதாரர் தனக்கு சொந்தமான இவ்விடம் தனக்கே உரிமை உள்ளது என்பதை ஆவணங்கள் மூலம் நிரூபித்துள்ளார்.<br>மேற்படி இந்த நிலங்களிலிருந்து இடுகாடு, சுடுகாடு எதுவும் 100 மீட்டருக்குள் இல்லை எனவும் வெள்ளப்பெருக்கால் உத்தேச மனைப்பிரிவு இடம் பாதிக்கப்படாது உத்தேச மனைப்பிரிவுக்குள் 100 மீட்டருக்கு புகைவண்டி பாதை ஏதும் இல்லை எனவும் இந்த நிலத்திலிருந்து அமைக்கப்படும் பிரதான சாலை தேசிய நெடுஞ்சாலையோடு இணைக்கப்படவில்லை எனவும் மேற்படி புல எண்ணில் அமையும் மனைப்பிரிவுகளில் உயர் மின் அழுத்த கம்பி பாதைகள் எதுவும் இல்லை.<br>மேற்படி நிலப்பயன்பாடு மாற்றம் கோரும் புல எண்ணில் உள்ள நிலங்களில் மனுதாரர் பெயரில் பட்டா மாற்றம் செய்துள்ளதை நிலப்பயன்பாடு மாற்றம் கோரும் புல எண்ணில் உள்ள நிலங்களில் மனுதாரர் மனைப்பிரிவு அமைப்பதற்கு சட்டபூர்வமான உரிமை உள்ளது என சீர்காழி அரசு வழக்கறிஞர் தனித்தனியே சட்ட கருத்துரை | தீர்மான எண்-946<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | வழங்கிள்ளார். புல எண்களின் நகரளவை பதிவேடு நகல், நகரளவை வரைப்படம், சிட்டா அடங்கல் நகல், நிலப்பயன் மாற்றம் கோரும் வரைப்படம் ஆகியவை சமர்பித்துள்ளார்.<br>**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்:0336/2023/எப்1.** | |
| பொருள் எண்-21 | சீர்காழி நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்த திரு எம்.எஸ். பிரபாகரன், என்பவர் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரி தொகையினை வரிவிதிப்பாளர்களிடம் வசூல் செய்து நகராட்சி கருவூலத்தில் செலுத்தாதால், தனியர் மீது நிர்வாக ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டடு, வசூல் பணியில் முறைகேடுகளில் ஈடுப்பட்டது, நிருபணமானதால் தனியரை நிரந்தரமாக பணி நீக்கம் (Removed from Service) செய்து உத்திரவிடப்பட்டுள்ளது.<br>திரு எம்.எஸ். பிரபாகரன், என்பவர் இதனை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்ற வழக்கு எண். W.P.No.25550/2016-ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு டி.எம்.ராஜாங்கம், அவர்கள் ஆஜராகி வழக்காடவும், அதற்கான செலவுத் தொகை (Legal fees) ரூ.20,000/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) அவசர அவசியம் கருதி வழக்கிற்கான தொகை உடன் வழங்க வேண்டியுள்ளதால், நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று அளித்திட அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 606/2023/சி.1.** | தீர்மான எண்-947<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

நாள்:25-04-2023

இடம்:சீர்காழி

**திருமதி.R.துர்காபரமேஸ்வரி.MBA.,**
நகர்மன்றத் தலைவர்,
சீர்காழி நகராட்சி.